**நாள் 30.06.2023.**

**OS 81/2019 பி.சா 1 சாட்சி சூசைராஜ் மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

வாதி என் வீட்டிற்கு வந்து தாக்கியதாக சொன்ன தேதி எனக்கு ஞாபகமில்லை. அன்று நான் கோயம்புத்தூருக்கு போயிருந்தேன். அன்று நடந்தது பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. முதல்விசாரணை வாக்குமூலம் பத்தி 11ல் அந்த சம்பவம் குறித்து சொல்லப்பட்டுள்ளது. எனக்கு அந்த சம்பவம் பற்றி தெரியாது என்பதால் முதல்விசாரணையில் சொல்லியுள்ள அந்த சம்பவம் பற்றிய சங்கதிகள் நான் சொன்னவை அல்ல என்றால் சரிதான் என் மனைவி சொன்னார். நிரூபண வாக்குமூலத்தில் அடங்கியுள்ள சங்கதிகள் நான் சொன்னது கொஞ்சம் என் மனைவி சொன்னது கொஞ்சம் என்றால் சரிதான். என் மனைவி இந்த வழக்கில் சாட்சி சொல்ல தயாராக இருக்கிறார். என் மனைவி அந்த சம்பவம் குறித்து காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். முதல்தகவல்அறிக்கை பதிவாகியுள்ளது. என் மனைவி எடுத்த நடவடிக்கைகள் குறித்தும் எனக்கு நேரடியாக தெரியாது. என் மனைவி சொல்லித்தான் தெரியும். அந்த சம்வபம் சம்பந்தமான நடவடிக்கைகள் குறித்து முதல்விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் என் மனைவி சொன்னதுதான் என்றால் சரிதான். என் மனைவியின் புகாரின்பேரில் பதிவு செய்யப்பட்ட வழக்கின் எண் எனக்கு ஞாபகமில்லை. எந்த நீதிமன்றம் என்பதும் ஞாபகமில்லை. குற்ற வழக்கு யார்யார் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. யார்யார் மீது என்னென்ன குற்ற செயல்கள் செய்ததாக வழக்கு பதியப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது. அந்த விவரங்களும் என் மனைவிக்குத்தான் தெரியும். டேவிட்டும் அவரை சேர்ந்தவர்களும் என் வீட்டிற்கு நுழையகூடாது என்று தடை உத்தரவு கேட்டு மாண்புமிகு உயர் நீதிமன்றத்தில் என் மனைவி வழக்கு தாக்கல் செய்திருந்தார் அதில் தடை உத்தரவு கிடைத்துள்ளது. உயர்நீதிமன்ற வழக்கின் விவரங்களும் என் மனைவிக்குத்தான் தெரியும். உயர்நீதிமன்ற தடை உத்தரவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேன். எந்தெந்த தேதியில் யார்யாரை வைத்து பஞ்சாயத்து நடந்தது என்று எனக்கு ஞாபகமில்லை. அந்த பஞ்சாயத்துக்கள் குறித்து என் மனைவிக்குத்தெரியும். வாதி வீடுபுகுந்து அடித்தார் என்றும், பணம் மற்றும் நகை எடுத்து சென்றார் என்ற விவரத்தை எதிர்வழக்குரையில் சொல்லியிருக்கிறேன். 27.09.2020 அன்று அந்த சம்பவம் நடந்ததாக நிரூபண வாக்குமூலம் பத்தி 11ல் சொல்லப்பட்டது. எதிர்வழக்குரை தாக்கல் செய்தபோது வேறு வழக்கறிஞர்

இருந்தார். முதல்விசாரணை நிரூபணவாக்குமூலம் தாக்கல் செய்தபோது எனக்கு வேறு வழக்கறிஞர் இருக்கிறார். 27.09.2020ம் தேதி அவ்வாறு சம்பவம் நடக்கவில்லை என்பதால்தான் 29.10.2020ம் தேதி தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் அதுகுறித்து சொல்லவில்லை என்றும் பின்னிட்டு கற்பனையான விவரத்தை முதல்விசாரணையில் சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. செந்தில்குமாரி என்பவரை எனக்கு தெரியாது. முதல்விசாரணையில் செந்தில்குமாரி பற்றி சொல்லப்பட்டுள்ள விவரங்கள் நான் சொன்னவைதான். செந்தில்குமாரி பற்றி என் மனைவி சொன்ன விவரங்களை நான் முதல்விசாரணையில் சொல்லியிருக்கிறேன். செந்தில்குமாரி பற்றி சொல்லப்பட்ட விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது. வாதியின் குடும்பத்தார் பற்றி எனக்கு தெரியும். வாதியின் தம்பி, சகலை, அக்கா ஆகியோர்கள் என் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளதால் வழக்குகளுக்கு பின்னர் அவர்களை பற்றி எனக்கு தெரியும். அந்த வழக்குகளை நான் நடத்திகொண்டிருக்கிறேன். அவர்களிடம் எனக்கு சுமூக உறவோ, பேச்சுவார்த்தையோ இன்றுவரை இல்லை. என்னுடைய முதல்விசாரணை வாக்குமூலத்தில் பத்தி 15ல் 1ம்வாதியின் அக்கா, அப்பா, தம்பி, சகலை ஆகியோர்களையும் 1ம் வாதி ஏமாற்றிவிட்டதாக சொல்லப்பட்டுள்ளது ஆனால் அந்த சங்கதிகள் சரியல்ல. நிரூபணவாக்குமூலத்தில் படித்துபார்த்துதான் கையெழுத்து போட்டேன். எனக்கு தெரியாத மற்றும் சரியில்லாத விவரங்கள் நிரூபணவாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ளதே அதை நீக்கி விடுங்கள் என்று நான் என் வழக்கறிஞரிடம் சொல்லவில்லை. செய்திதாள்களில் மறுப்பு அறிவிப்பு வழக்கறிஞர் மூலம் என்னால் கொடுக்கப்பட்டுள்ளது. அவற்றில் என்ன சொல்லப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியும். பிசாஆ 6 ல் என்ன தகவல் சொல்லப்பட்டது என்று எனக்கு ஞாபகமில்லை. தகவல் கேட்டது நான்தான். பிசாஆ 6 ஐ பார்த்துவிட்டு தகவலை என் மனைவி கேட்டதாக சொல்கிறார். பிசாஆ 7 ல் கேவியட் மனு அறிவிப்பில் 1 ம் வாதியின் முழுவிலாசமும் சொல்லப்பட்டது. பிசாஆ 4 வழக்கறிஞர் அறிவிப்பில் பிசாஆ 6 ல் கண்ட விலாசம் சொல்லப்படவில்லை என்றால் பிசாஆ 4 ல் உள்ள விலாசத்தை என்னால் படிக்கமுடியவில்லை. வாசாஆ 1 ல் இருப்பது என்னுடைய கையொப்பமும் என்னுடைய மனைவியின் கையொப்பமும் ஆகும். பிசாஆ 9 முதல்தகவல்அறிக்கையில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். அந்த முதல்தகவல்அறிக்கை எந்த தேதியில் நடந்த சம்பவத்திற்காக போடப்பட்டது என்று எனக்கு தேதி ஞாபகமில்லை. டேவிட் மற்றும் பலர் மீது வீடு புகுந்ததற்காக போடப்பட்டது. எந்த

நீதிமன்றத்தில் அந்த வழக்கு இருக்கிறது என்று எனக்கு தெரியாது. பிசாஆ 10 வீட்டிற்கு 1ம் வாதி வரக்கூடாது என்று வாங்கிய தடை உத்தரவு நகல். தடைஉத்தரவும், எங்களுக்கு போலிஸ் பாதுகாப்பும் கேட்டு தாக்கல் செய்த மனுவில் கிடைத்த உத்தரவுதான் அது. மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் போலிஸ் பாதுகாப்பு கொடுக்கவில்லை. ஏன் கொடுக்கவில்லை என்று தெரியாது. அன்புசெழியன் என்பவர் என் மீது தாக்கல் செய்த வழக்கு விசாரணை நீதிமன்றத்திலேயே நிலுவையில் உள்ளது. அந்த வழக்கில் என்னுடைய நிலைப்பாடு என்ன என்பதை பிசாஆ 11 லிருந்த தெரிந்துகொள்ளமுடியாது. ஆரோக்கியதாஸ் போட்ட வழக்கில் என்னுடைய நிலைப்பாடு என்ன என்று பிசாஆ 12 லிருந்து தெரிந்தகொள்ள முடியாது அந்த வழக்கு அவர் வராததால் தள்ளுபடி ஆகிவிட்டது. பிசாஆ 13, 14, 16 லிலும் என்னுடைய கட்சி என்ன என்று தெரிந்துகொள்ளமுடியாது. நான் சொத்தை விற்கிறேன் என்று பலபேரிடம் ஒப்பந்தம் போட்டிருக்கிறேன் என்றும் பலபேரிடம் கடன் வாங்கியிருக்கிறேன் என்றும் அதனால் அவரவர் என் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றும் அந்த வழக்குகளுக்கும் 1ம் வாதிக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை அடமானம் வைத்து 3ம் பிரதிவாதியிடம் கடன் வாங்கியிருக்கிறேன். ரூ. 85,00,000/- கடன் வாங்கினேன். வட்டி செலுத்தி வருகிறேன். சுமார் 70, 75 இலட்சம் பாக்கி இருக்கும். நானும் என் மனைவியும் வாதிக்கு கிரய ஒப்பந்தம் எழுதி கொடுத்துவிட்டு தற்போது உள்நோக்குடன் அதை மறுக்கிறனே் என்றால் சரியல்ல. வாதிகள் ஒப்பந்தப்படி நடந்து கொள்ள தயாராக இருக்கிறார்கள் என்றும் அதனால் அவர்கள் கேட்டவாறு தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**<u>3ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

வழக்கு சொத்தை வைத்து 3ம் பிரதிவாதியிடம் வாங்கிய ஈட்டுறுதி அடமானக்கடன் இன்னும் நிலுவையில் இருக்கிறது என்றால் சரிதான்.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/- A. மலர்விழி)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.